**செய்தி வெளியீடு எண்: 07/2021** **நாள்: 20.11.2021**

**<u>சென்னை மெட்ரோ இரயில் நிறுவன அதிகாரப் பூர்வ இணையதளத்தில் வெளிவரும் வேலை வாய்ப்பு அறிவிப்புகள் தான் உண்மை</u>**

கோயம்பேடு, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தில் வேலை வாய்ப்புகள் இருப்பின் அதற்கான அறிவிப்புகள் அதிகாரப் பூர்வ இணையதளத்தில் வெளியிடப்படும், அவைதான் உண்மையான அறிவிப்புகள் என்றும் பிற இணையதளத்தில் அவ்வப்போது வெளிவரும் வேலை வாய்ப்பு அறிவிப்புகளை யாரும் நம்ப வேண்டாம் என்று மெட்ரோ இரயில் நிர்வாகம் செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளது.

இது குறித்து சென்னை மெட்ரோ இரயில் நிர்வாகம் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தில் பல்வேறு துறைகள் உள்ளது. இத்துறைகளின் கீழ் பல்வேறு பிரிவுகளும் செயல்பட்டு வருகிறது. இந்த துறைகளிளோ துறை சார்ந்த பிரிவிகளிளோ ஏதேனும் வேலை வாய்ப்பு இருப்பின் அதற்கான முன் அறிவிப்பு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் அதிகாரப் பூர்வ இணையதளமான www.chennaimetrorail.org என்ற இணையதள முகவரியில் தெரிந்து கொள்ளலாம். இதை தவிர தினசரி தமிழ் நாளிதழ், ஆங்கில நாளிதழ் மற்றும் வேலைவாய்ப்பு அறிவிப்பு தாள்களிலும் (Employment Notification Paper) வேலைவாய்ப்பு அறிவிப்புகள் வெளியிடப்படுகிறது.

எனவே, வேலை வாய்ப்புக்கு தகுதியுடையவர்கள், வேலை வாய்ப்பு தேடுபவர்கள் சென்னை மெட்ரோ இரயில் நிறுவன அதிகாரப் பூர்வ இணையதளத்தில் வெளிவரும் அறிவிப்புகளை தெரிந்து கொள்ளலாம். இதை தவிர வேறு எந்தவொரு இணையதளத்திலும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவன வேலை வாய்ப்பு செய்திகளை யாரும் நம்ப வேண்டாம். இந்நிறுவனத்தின் பல்வேறு வேலை வாய்ப்புகள் இருப்பதாக பொய்யான இணைய தளத்தில் செய்திகளை வெளியிடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். பொய்யான இணையதளத்தில் வெளியாகும் செய்திகளை / விளம்பரங்களை நம்பி யாரும் ஏமாற வேண்டாம். இதற்கு எந்தவிதத்திலும் இந்நிறுவனம் பொறுப்பேற்காது.

இத்தகவலை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.

**வெளியீடு: இணை இயக்குநர் (மக்கள் தொடர்பு)**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை.**